**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

O.S.No.04/2025

பி.வா.சா.2– பாண்டியன் த/பெ கந்தசாமி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 04.07.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பி.வா.சா.2– பாண்டியன் த/பெ கந்தசாமி**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. எனது பாட்டனார் பெயர் பொன்னன் ஆவார். பொன்னனுக்கு யார் யார் வாரிசுகள் என்றால் அன்னாவி, வைரப்பெருமாள், கந்தசாமி ஆகும். கந்தசாமியின் மகன் தான் நான் என்றால் சரிதான். சர்வே எண். 145 ல் தான் பொன்னனின் மகன்களான அன்னாவி, வைரப்பெருமாள், கந்தசாமி ஆகியோர்கள் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். சர்வே எண். 14 5 ஆனது 145/1 ஏ, 1 பி, 1 சி ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் கிராம ரெக்கார்ட்டில் உள்ளது.

2. அன்னாவி மகன் சாமிகண்ணு, மகள் சந்திரா ஆகியோர்கள் சேர்ந்து தனது தாயாரான தனபாக்கியத்திற்கு விடுதலைப்பத்திரம் எழுதி வைத்த விவரமும் மேற்படி விடுதலை பத்திரத்தின் அடிப்படையில் தனபாக்கியம் தனது மகனான 1ம் பிரதிவாதிக்கு சர்வே எண். 145/1 சில் உள்ள நிலத்தை செட்டில்மெண்ட் எழுதி வைத்தவிவரம் எனக்கு நேரிடையாக தெரியாது சொல்லித்தான் தெரியும். நானும், மணிகண்டனும் சர்வே நெம்பரில் தவறு உள்ளது என்று வருவாய்துறையில் புகார் கொடுத்தேனா என்றால் நீதிமன்றத்திற்கு வந்த பிறகு தான் தெரியும்.

3. இது சம்பந்தமாக கோட்டாட்சியர் விசாரணையில் கலந்து கொண்டேன் அப்போது தான் வரைபடம் தவறு என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். விசாரணை முடிவில் எனக்கு சாதகமாக உத்தரவு போட்டார்களா என்றால் இல்லை. வாய்மொழியாக பிரித்துகொண்டோம் என்பது பொய் என்றால் சரியல்ல. தெற்கு வடக்காக பிரித்துக்கொண்டோம் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. கிழமேல்தான் நிலம் பிரிக்கப்பட்டு வாதிகளுக்கு அதை அடுத்து தென்புறமும், என்னுடைய தந்தைக்கும் அதையடுத்து தென்புறமும், பிரதிவாதி வகையறாக்கு தென்புறம் இறுதியாக பிரிக்கப்பட்டு நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

4. தற்போது கிழமேல் ரோடு வாதியின் நிலத்திற்கு வடபுறம் உள்ளதால் தங்கள் நிலத்திற்கு பாதை வேண்டும் என்பதற்காக தென்வடலாக பாகம் பிரித்துக்கொண்டோம் என்று பொய் கட்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தொழில்கூடம் அமைத்திருப்பதாக சொல்வது சர்வே எண். 145/1 ஏ–ல் அமைத்துள்ளார் என்றால் சரிதான். வருவாய்துறை ஆவணத்தின் படி சர்வே எண். 145/1 ஏ– வாதிகள் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. என் பெயரில் சர்வே எண். 145/1 பி– க்கு பட்டா உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு 145/1 சி–ல் பட்டா உள்ளது என்றால் தெரியாது.

5. வாதிகளின் தந்தைவைரப் பெருமாள் முத்தரையர் பெயரில் சர்வே எண். 145/1 ஏ, 145/2 ஏ, ஆகியவற்றுக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது. பிரதிவாதியின் பெயரில் சர்வே எண். 145/1 சி–ல் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ExA5 வாதியின் பெயரில் மேற்படி பட்டா உள்ளது என்றால் சரிதான். நாங்கள் சொல்வது போல் தென்வடலாக பிரித்துக் கொள்ளவில்லை என்றாலும் கிழமேலாக பிரித்துக் கொண்டோம் என்றாலும் சரியல்ல வருவாய்துறையில் தப்பாக கொடுத்துள்ளார்கள். தற்போது தென் வடலாகத்தான் உள்ளது.

6. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் தற்போது 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான சர்வே எண். 145/1 சி–ல் அமைந்துள்ள தொழிற்கூடத்தை நமச்சிவாயம் என்பவக்கு வாடக்கைக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். நான் பிரதிவாதிகள் மாமாமுறை வேண்டும் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சி நிலைக்கத்தக்கதல்ல, முதல் விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும் மாற்றி சொல்லியுள்ளதால் ஏற்கத்ததக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.07.07 10:41:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.